ஈழநாடு
Eelanadu

விலை ரூ. 30/=

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 14.11.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 318 | பக்கங்கள் : 08

# மாவீரர் துயிலும் இல்லங்களை மக்களிடம் ஒப்படையுங்கள்!

## கோடீஸ்வரன் எம். பி.

கொழும்பு, நவ. 14
வடக்கு, கிழக்கில் படைகள் வசம் உள்ள துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவற்றை முழுமையாக மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் சுயாதீனமாக நினைவுகூர அரசாங்கம் வழிவகுக்க வேண்டும் என்றும் அவர் நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

மேலும், 07

# தெற்கில் போதைப்பொருள் அச்சுறுத்தல்; ஓய்வுபெற்ற படையினரே பின்னணியில்

## கஜேந்திரகுமார் எம். பி. சபையில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 14
வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் ஈடுபாட்டை கையாளாமல் போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து விடுபட முடியாது. இதேபோன்று தெற்கில் போதைப் பொருள் அச்சுறுத்தலில் ஈடுபட்டவர்கள் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் தான் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், நேற்றைய தினம் (நேற்று முன் தினம்) வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் இ.சந்திரசேகர் உரையாற்றினார். அவரின், அனுமதியுடன் உரையில் குறுக்கிட்டு, இராணுவத்தினரின் செயல்பாட்டை கையாளாவிட்டால் போதைப் பொருள் பரவலை வடக்கு, கிழக்கில் ஒழிக்க முடியாது என்று கூறினேன்.

கிளர்ச்சிக்கு எதிரான ஓர் உத்தியாக இராணுவ கட்டமைப்பு 07

# மாகாண தேர்தலை நடத்த ஆதரவளிக்க நாம் தயார்!

## எதிர்க்கட்சி சபையில் அறிவிப்பு



கொழும்பு, நவ. 14
மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி மக்களுக்கு அளித்த வாக்குறுதியை விரைவாக நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதனால் தேர்தல் தொடர்பில் கலந்துரையாட பிரதமர் தலைமையில் குழு ஒன்றை அமைக்குமாறு சபாநாயகரை கேட்டுக் கொள்கிறோம் - என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

மாகாண சபைகள் தேர்தலை ஒரு வருடத்துக்குள் நடத்துவதாகவே அதிகாரத்துக்கு வருவதற்கு 07

# முள்ளிவாய்க்காலில் திருமாவளவன் அஞ்சலி



முல்லைத்தீவு, நவ. 14
தமிழ்நாட்டின் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

தொல். திருமாவளவன் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவரை, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வரவேற்றார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற “கார்த்திகை வாசம்“ மலர் கண்காட்சி நல்லூர் கிட்டு பூங்காவில் (சங்கிலியன் பூங்கா) இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகிறது. இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காகவே 07

# இளைஞர்கள் மூவர் கைது!

- பு.கஜிந்தன், த.பிரதீபன்

யாழ்ப்பாணம், நவ. 14
போதை மாத்திரைகளுடன் இளைஞர்கள் மூவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் - 07

# அன்று ஆட்சிக்காக - இன்று நாட்டின் வெற்றிக்காக போராடி வருகிறோம்

## ஜனாதிபதி அநுர குமார



கொழும்பு, நவ. 14
அன்று ஆட்சியை கைப்பற்றப் போராடினோம் இன்று இந்த நாட்டுக்கு வெற்றியைப் பெற்று தருவதற்காக போராடி வருகிறோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பியின் 36ஆவது ஆண்டு கார்த்திகை வீரர்கள் தினம் நிகழ்வு நேற்ற கொழும்பு விகார மஹா தேவி பூங்காவில் நடைபெற்றது. இதில், 07

# யாழ். மாநகர சபை நினைவேந்தலை முன்னெடுப்பதை நாம் ஏற்கமுடியாது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

- த.பிரதீபன், பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், நவ. 14
மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை யாழ். மாநகர சபை முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நல்லூர் பகுதிக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பில் தமிழ்த் தேசிய 07

# சொந்த கட்சியினராலேயே மரிக்காருக்கு அச்சுறுத்தல்

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, நவ. 14
எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மரிக்காரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது அவர்களின் கட்சி உறுப்பினர்களாலேயே என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே இதனை அவர் 07

# கிணற்றில் குளித்தவர் சடலமாக மீட்பு

-த. பிரதீபன்

வடமராட்சி, நவ. 14
தோட்டக் கிணற்றுக்குள் கயிறு கட்டி இறங்கிக் குளித்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை 07

# நாட்டில் ஐந்தில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிப்பு

## - மூன்றில் ஒரு பங்கினருக்கு பார்வை பாதிப்பு -

கொழும்பு, நவ. 14
நாட்டில் வயது வந்தோரில் ஐந்து பேரில் ஒருவர் தற்போது நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டுள்ளார். இவர்களில், மூன்றில் ஒரு பங்கினர் கண் பார்வை இழப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று தேசிய கண் மருத்துவமனையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் கபில பந்துதிலக தெரிவித்துள்ளார். 07

# பொய் தகவல்களால் மன உளைச்சல்

## செல்வம் அடைக்கலநாதன்

கொழும்பு, நவ. 14
சமூக வலைத்தளங்களிலும் சில ஊடகங்களிலும் தன்மீது சேறுபூசும் வகையில் பொய்யான தகவல்கள் பதிவேற்றப் படுகின்றன. இதனால் தான் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த பொய் தகவல்கள் மூலமாக தனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் ஊடக நிறுவனங்கள் மற்றும் சமூக 07

# தேர்தல்கள் ஆணையாளர் ஓய்வு பெற்றார்




கொழும்பு, நவ. 14
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியி லிருந்து ஓய்வு பெறுவதாக 07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு பண்பாட்டு பெருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்



முல்லைத்தீவு, நவ. 14

வட மாகாண பண்பாட்டு பெரு விழாவுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வட மாகாண பண்பாட்டு பெருவிழா எதிர்வரும் டிசெம்பர் 13ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ளது.

இதையொட்டியே நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. வடக்கு மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சனின் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் நடந்தது. இதில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ச. மஞ்சுளாதேவி, வடக்கு மாகாண பண்பாட்ட லுவல்கள் அலகின் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (ஐ-6)

## உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

### உள்ளூராட்சி சபைகளுக்கு ஆளுநர் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், நவ. 14

உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகளை வழங்குவதற்கு மேலாக தங்களது வருமானங்களையும் அதிகரிக்க வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் செயல்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆளுநர் உரையாற்றியபோது,

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பிரதேசங்களுக்கு முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டியது அவசியம். முதலீட்டாளர்களுக்குத் தேவையான அடிப் படை வசதிகளை ஏற்படுத்தி வழங்க வேண்டும். அதே போன்று ஏற்கனவே முதலீடு செய்தவர்கள் "அவர்கள் எங்களுக்கு வரி செலுத்துகின்றனர்" என்ற அடிப்படையில், அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால், இந்த விடயங்க ளில் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடு கள் திருப்திகரமாக இல்லை.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது சொந்த வருமானத்தின் அடிப்படையிலேயே சபைகளை நிர்வகிக்க வேண்டிய நிலை ஏற்படும். அதற்குத் தயாராக தற்போது முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தை மட்டுமல்லாது, வங்கிக் கடன்கள் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் உதவிகளைப் பற்றிய விழிப்புணர்வு வடக்கு மாகாணத்தில் குறைவாக உள்ளது. இதே நேரத்தில் தென்பகுதியிலிருந்து அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இதற்குக் காரணம் மக்களிடையிலும், எங்களது களநிலை அலுவலர்களிடையிலும் தேவையான விழிப்புணர்வு இல்லாமையாகும்."

இதை மாற்றும் நோக்கத்துடன், வடக்கு மாகாணத்தில் உள்ளூார் கடன்கள் அபிவிருத்தி நிதியின் செயற்பாடுகளை விரிவாக்கும் வகையில் இந்த விழிப்புணர்வு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது நிலைத்தாபன அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான கடன்களை இந்த நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார். (அ)

## கார்த்திகை வீரர்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு




வவுனியா, நவ. 14

ஜே. வி. பி. என்று அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியினரின் கார்த்திகை வீரர்கள் தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

ஜே. வி. பி. தலைவர் ரோகண விஜயவீர 1989 நவம்பர் 13ஆம் திகதி கொல்லப்பட்டார். அவர் இறந்த நாளில் அந்த அமைப்பின் சார்பில் உயிரிழந்த அனைவரையும் கார்த்திகை வீரர்கள் தினம் என்ற பெயரில் ஜே. வி. பி. நினைவுகூர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)



சுன்னாகம் பொது நூலகத்தில் சிறுவர் வாசிப்பு வட்டத்தினர் நேற்று முன்தினம் புத்தக சந்தை நிகழ்வை நடத்தினர். இதில், ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

## பெண்களின் கூலி உயர்வுக்காக போராடிய பெண் காலமானார்

யாழ்ப்பாணம், நவ. 14

விவசாய பெண்களின் கூலி உயர்வு போராட்டத்தில் முன்னின்ற புன்னாலைக்கட்டுவன் - மத்தாளோடை குறிச்சியை சேர்ந்த திருமதி பாலேந்திரம் பரிமளம் (ராணி) நேற்று முன் தினம் காலமானார்.

இவர் 1983ஆம் ஆண்டு கிராமிய உழைப்பாளர் சங்கம் மத்தாளோடையில் நடத்திய விவசாய கூலிப்பெண்களின் கூலி உயர்வு போராட்டத்தில் முன்னின்று உழைத்தவர்.

அப்போது, விவசாய பெண்களின் நாள் கூலி 10 ரூபாயாக இருந்தது. இதனை உயர்த்துவதற்கும் தோட்ட முதலாளிகள் பெண்களை ஏற்றத்தாழ்வுடன் நடத்துவதற்கும் எதிர்ப்பு தெரிவித்தும் 34 நாட்கள் தொடர்ச்சியாக நடந்த போராட்டத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பருத்தித்துறை மரக்கறி சந்தை மீண்டும் பழைய கட்டடத்தில்!

வடமராட்சி, நவ. 14

பருத்தித்துறை மரக்கறி சந்தையின் வியாபார நடவடிக்கைகள் மீண்டும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மேல் தளத்தில் ஆரம்பமாகியுள்ளன.

நகர சபையால் புதிதாக மரக்கறி சந்தை மீன் சந்தை வீதியில் அமைக்கப்பட்டு இடம்மாற்றப்பட்டிருந்தது.

அது, போதிய வசதிகளற்ற நிலையில் காணப்படுகிறது என்றும் வியாபார நடவடிக்கைகள் போதாது உள்ளன என்று கூறியும் வியாபாரிகள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில், கடும் மழை யால் மரக்கறி சந்தையில் வெள்ளம் தேங்கியது. இதனால், வெள்ளநீர் பவுஸர் மூலம் வெளியேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மரக்கறி வியாபாரிகள் பழைய கட்டடத்துக்கு தாமாகவே சென்று மீண்டும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-03)

## பேராறு குடிதண்ணீர் திட்டத்தின் நீரை பருகுவதால் ஆபத்தில்லை

வவுனியா, நவ. 14

வவுனியாவுக்கான குடி தண்ணீர் விநியோக நீர்த்தேக்கமான பேராறு நீர்த்தேக்க நீரை பருகுவதால் ஆபத்தில்லை. - பொறியியலாளர் நீர் விநியோக வடிகாலமைப்பு அதிகாரசபை

வவுனியாவுக்கான குடிதண்ணீர் விநியோக நீர்தேக்கமான பேராறின் நீரை பருகுவதால் ஆபத்து இல்லை என்று வவுனியா மாவட்ட நீர் விநியோக வடிகாலமைப்பு அதிகார சபையின் பொறியிலாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை முதல் மீன்கள் இறந்து கரையொதுங்கி வருகின்றன. இந்த மீன்கள் இறப்புக்கு காலநிலை மாற்றமே காரணம். தண்ணீரில் எந்தப் பிரச்னையும் ஏற்படவில்லை. எனவே, மக்கள் அச்சமின்றி பேராறு குடிதண்ணீர் திட்ட நீரை பருக முடியும் - என்றும் அவர் கூறினார். (ஐ-10)

## போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் நால்வர் கைது

வவுனியா, நவ. 14

வவுனியாவில் போதை மாத்திரைகளுடன் 4 இளைஞர்களை தாம் கைது செய்துள்ளனர் என்று மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். திருநாவற்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 80 போதை மாத்திரைகளுடன் கைது செய் யப்பட்டார். இதைத் தொடர் ந்து, அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 30 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார்.

இதேபோன்று, அண்ணா நகர் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் 20 போதை மாத்திரைகளுடனும் கத்தார் சின்னக்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 20 போதை மாத்திரைகளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
விசுவாவசு வருடம், ஐப்பசி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# போதைப்பொருளில் இராணுவம்

வடக்கில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் இலங்கை இராணுவம் இருப்பதாக வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ந்து கூறிவருகிறார். இது உண்மைக்குப் புறம்பானது என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் குறிப்பிட்டிருந்த நிலையில், அதில் உண்மையுண்டு என்று தேசிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருக்கிறார். இப்போது கேள்வி உண்மையிலேயே போதைப்பொருள் கடத்தலில் இராணுவத்துக்கு தொடர்பிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் போதைப்பொருள் கடத்தல் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னேறி வருகிறது. பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த நிலையில், இதுவரையில் வெளியில் தெரியாத தமிழர்களின் தொடர்புகளும் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் இந்திய தேசிய புலனாய்வு அமைப்பும் சில புதிய தகவல்களை வெளியிட்டிருக்கிறது. அதாவது, பாகிஸ்தானில் தலைமறைவாக இருந்து இயங்கிவரும் மும்பை நிழல் உலகத் தலைவரான தாவூத் இப்ராஹிமின் வலையமைப்பு விடுதலைப் புலிகளின் முன்னைநாள் உறுப்பினர்களை பயன்படுத்தி வருவதாகவும் இந்த வலையமைப்பு தற்போது தென்னிந்தியாவுக்குள்ளும் இலங்கைக்குள்ளும் நுழைந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் வடக்கு மாகாணத்தில் இராணுவத்துக்கும் தொடர்பிருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் ஒருவர் கூறியிருப்பதானது நிலைமைகளின் பாரதூரத்தை உணர்த்துகிறது. இலங்கையின் குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கான பாதையாக வடக்கு மாகாணமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அண்மையில், வெளிநாட்டில் பாதாளக் குழுவைச் சேர்ந்த ஒரு பெண்மணியின் கைதைத் தொடர்ந்தே இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. ஆனால், இந்த இடத்தில் எழும் கேள்வி - இலங்கை கடற்படையின் பலமான பாதுகாப்பு வலையமைப்பையும் மீறி இவ்வாறான கடல் வழிப் பயணங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன? இந்த இடத்தில்தான் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் வாக்குமூலம் கவனத்துக்குரியதாகிறது.

முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ காலத்தில் போதைப்பொருள் கடத்தல் சர்ச்சைகளுடன் சில அரசியல்வாதிகளும் தொடர்புபட்டிருந்தனர். அவர்களின் அரசியல் இருப்புக்கு பாதாளக் குழுக்கள் தேவைப்பட்டன. அதனையே மறுவளமாக பாதாளக் குழுக்கள் தங்களின் இருப்புக்கு பயன்படுத்திக் கொண்டன. இவ்வாறானதொரு பின்புலத்தில் பாதாள உலகக் குழுக்கள் என்பவை அனைத்துத் துறைகளுக்குள்ளும் ஊடுருவியிருக்கின்றன என்பது தற்போது அம்பலமாகியிருக்கிறது.

அண்மையில், ஒரு பாடசாலை அதிபர்கூட கைது செய்யப்பட்டிருக்கிறார். போதைப்பொருள் கடத்தல் எந்தளவுக்கு சமூகத்துக்குள் ஊடுருவியிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். இந்த விடயத்தில் அனைத்துக் குற்றவாளிகளையும் வேரறுக்கும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெற்றிபெறுமாக இருந்தால் அனைத்து மக்களாலும் அரசாங்கம் ஆதரிக்கப்படுவதற்கான வாய்ப்பே அதிகமாக இருக்கிறது. ஏனெனில், இது அனைத்து சமூகங்களுக்குமான பொதுவான பிரச்னையாகும்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்."

- ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)



### அரிசி மாபியா விவகாரம்

# நிர்ணய விலைக்கு மேல் விற்றால் கடும் நடவடிக்கை

கொழும்பு, நவ. 14

அரிசி மாபியா தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. காதர் மஸ்தான் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கேள்விகளுக்கு வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க பதில் வழங்கினார்.

அந்தவகையில், நாட்டு மக்களின் வருடாந்த அரிசி தேவை 2.7 மில்லியன் மெற்றிக் தொன்னாகும். அதில் வீட்டுத் தேவைக்காக 2.4 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியும், கைத்தொழில் துறைக்காக 0.3 மில்லியன் மெற்றிக்தொன் அரிசியும் தேவைப்படுகிறது.

அதேநேரம் உள்நாட்டு அரிசி உற்பத்தி காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது. கடந்த சிறுபோகத்தில் உத்தேசிக்கப்பட்ட அரிசி விளைச்சலை விட, அறுவடை செய்யப்பட்ட நெல்லின் அளவு குறைவடைந்துள்ளது. எனவே ஓரளவு தட்டுப்பாடு நிலை காணப்படுகிறது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கீரிச் சம்பா உள்ளிட்ட சில அரிசி வகைகளுக்கு மேற்கொள்ளப்படும் விலைகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருகிறது.

சில அரிசிகளுக்கான விலைமனு கோரலின்போது, கீரி சம்பா அரிசி சந்தைக்கு நிரம்பல் செய்யப்படவில்லை. இதனால் ஒக்ரோபர் மாதம் முதல் கீரிச் சம்பா அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அத்துடன், அரிசி விலையை நுகர்வோர் அறிந்து கொள்ளும் வகையில் நுகர்வோர் விவகார அதிகார சபையினூடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விற்பனையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், கொள்வனவாளர்கள், விநியோகஸ்தர்கள், நுகர்வோர் என அனைத்து தரப்பினரும் விலை தொடர்பில் அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், நிர்ணய விலைக்கு மேலதிகமான விலையில் அரிசி விற்பனையில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

(அ)

# இலங்கைக் கடற்படையினரை கடுமையாக சாடும் எடப்பாடி!

சென்னை, நவ. 14


இலங்கை கடற்படையினரால், தமிழக கடற்றொழிலாளர்கள், மனிதாபிமானமற்ற முறையில் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளதாக, அண்ணா திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது எக்ஸ் பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், மீன்பிடிக்கச் செல்லும், தமிழக கடற்றொழிலாளர்கள், நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்கதையாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் திசை மாறி வந்ததை தமிழக கடற்றொழிலாளர்கள் எடுத்துக்கூறியும், அதனை பொருட்படுத்தாத இலங்கை கடற்படையினர், அவர்களை சட்டவிரோதமாக கைதுசெய்துள்ளதாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். நட்பு வட்டம் விரிவடையும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**இடபம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
உடன்பிறந்தவர்கள்-உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நீங்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் லாபம் வரும். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும்.

**கன்னி**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**துலாம்**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகள் கலந்து கொள்வீர்கள். அதிகாரிகள் அறிவுரைத் தருவார்கள்.

**விருச்சிகம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக்கொள்வீர்கள். உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். பணவரவு திருப்தி தரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் விரயம் வரும். ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மீனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

வறுமை நிலையை ஒழிப்பதற்கு

# “அரசாங்க சேவையை மட்டும் நம்பியிருக்காமல் தனிப்பட்ட முயற்சியை மேற்கொள்ள வேண்டும்”

யாழ்ப்பாணம், நவ. 14

வறுமை நிலையை ஒழிப்பதற்கு அரசாங்க சேவையை மட்டும் நம்பியிருக்காமல் தனிப்பட்ட முயற்சியை மேற்கொண்டு முன்னேற வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.



அறிவு சார்ந்த அனுபவ பகிர்வு நிகழ்வு யாழ். மாவட்டத்தில் வறுமை ஒழிப்பு செயல்திட்டங்களின் அமுலாக்கம் மற்றும் அவற்றின் விளைவுகளும் பிராந்திய ரீதியாக அபிவிருத்தி பிரச்னைகள் தொடர்பான யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை மாணவர்களுடனான அறிவு சார்ந்த அனுபவ பகிர்வு நிகழ்வும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் தலைமையில் அரசாங்க அதிபர் பிரதீபனின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பொருளியல் பீடத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதிக்கு பின்னர் யாழ். மாவட்டத்தின் வறுமை ஒழிப்பு செயல்திட்டத்தின் போக்குகள் தொடர்பிலான கலந்துரையாடலாக இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்த விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக பொருளியல் பீட மாணவர்களை வரவேற்றதுடன், குறைந்த வயதில் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து இந்த பொருளியல் துறைசார்ந்த கல்வியை இளம் வயதில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைத்துள்ளதாகவும் இதனை வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், பொருளாதார ரீதியாக அல்லது பொருளியல் ரீதியாக இந்த கல்வியை கற்கின்ற போது வறுமையானது மிக முக்கியமான இடத்தை வகிப்பதாகவும், வறுமைச் சுட்டிகளை பலவாறு கற்றுக்கொண்டாலும் அதன் நடைமுறைகளை கவனத்தில் எடுக்க வேண்டும். குறிப்பாக வறுமை என்பது ஒவ்வொருத்தருடைய சமூக பொருளாதார சூழல் என்ற அடிப்படையில் மாறுபடுவதுடன் நபருக்கு நபர் வேறுபடும் தன்மை கொண்டதாகவும் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சில பகுதிகளில் உள்ள மக்கள் பொருளாதார ரீதியில் வறுமையானவர்களாக இருந்தாலும் சில விடயங்களில் வசதிவாய்ந்தவர்களாக உள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த குடும்பங்களே அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு செயல்திட்டத்தின் ஊடாக இன்று முன்னோக்கி வந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அரசாங்கம் காலத்துக்குக் காலம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு அரச அதிகாரிகள் புள்ளிவிவரங்களை காலத்துக்கு காலம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தால் வறுமையை ஒழிப்பதற்காக அஸ்வெசும திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மக்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி திட்டமானது நிவாரண திட்டமாக இருந்து தற்போது வலுவூட்டல் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், குறிப்பாக அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்கு அரசாங்க அலுவலர்கள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இந்தப் பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் அல்லது பிரதேச மட்டத்தில் அல்லது கிராம மட்டத்தில் சென்று அவதானிப்பதன் ஊடாக உண்மையாக வறுமையின் தாக்கத்தை உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், மாணவர்கள் பொருளாதார ரீதியான வறுமை நிலையை ஒழிப்பதற்கு அரசாங்க சேவையை மட்டும் நம்பியிருக்காமல் தனிப்பட்ட முயற்சியை மேற்கொண்டு முன்னேற வேண்டும் என்றும் குறிப்பிட்டதுடன், யாழ். மாவட்டத்தில் வறுமையான பிரதேசம் என்று இனங் காணப்பட்டுள்ள இடத்தை சென்று பார்வையிடுவதற்கான வசதிகளை மேற்கொண்டு தருவதாகவும் அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# பேராறு நீர்த்தேக்க கரையில் இறந்து ஒதுங்கும் மீன்கள்

வவுனியா, நவ. 14

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தில் பெருமளவான மீன்கள் இறந்து ஒதுங்கி வருகின்றன.

வவுனியா மாவட்டத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக பேராறு நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பெருமளவான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருவதுடன், இது தொடர்பில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா. பாலேந்திரனுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த இடத்துக்கு சென்று பார்வையிட்டு, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

(எ-10)

# இடமாற்றம் பெற்று சென்ற யாழ். மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக கடமையாற்றி சாவகச்சேரி பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுச் சென்ற முன்னாள் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பிரான்சிஸ் சந்திர சத்தியசோதிக்கான சேவைநலன் பாராட்டு விழா யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், நெடுந்தீவு பிரதேச செயலாளராக கடமையாற்றிய போது தனது செயல்பாடுகளை மிகவும் சிறப்பாக ஆற்றியதாகவும் குறிப்பிட்டதுடன், சமுர்த்தித் திணைக்களம் மிகவும் சவால்கள் நிறைந்த நிர்வாகக் கட்டமைப்பாக காணப்பட்டபோதும் சிறப்பாக தமது சேவையை சத்தியசோதி ஆற்றினார் எனவும் சிறந்த உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார் எனவும் குறிப்பிட்டார். சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சுயவிவரக் கோவைகளை உறுதிப்படுத்த உறுதுணையாக செயல்பட்டார் எனவும் இந்தத் திணைக்களத்தில் தவறுகள் ஏற்படாமல் செயல்பட வேண்டும் என்பதில் முனைப்பாக செயல்பட்டவராகவும் கணக்காய்வு அறிக்கைகளை சிறப்பாக பேணியதாகவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். (எ)

# “சட்டத்தால் மட்டும் சமூகத்தை மாற்ற முடியாது”

யாழ்ப்பாணம், நவ. 14

சட்டத்தை மட்டும் வைத்து ஒரு சமூகத்தை மாற்ற முடியாத நிலையில் ஒரு சமூகத்தின் வரலாற்றை எடுத்துக்காட்டுவதற்கு ஆவண காப்பகம் முக்கியமானது என கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தெரிவித்தார்.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற அரசியல் தீர்வும் பொறுப்புக் கூறலும் ஒரு எண்ணிம ஆவண காப்பக அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு தொடக்க உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு சமூகத்தின் தேவைகளை நோக்கங்களை நிறைவேற்ற சட்டத்தை மட்டும் பயன்படுத்த முடியாது. ஒரு சமூகத்தின் கடந்த கால வரலாற்று சம்பவங்களை அறிய அவர்களின் ஆவணங்களை பாதுகாப்பது அவசியம்.

ஆவணக் காப்பகம் என்பது குறிப்பாக தமிழ் மக்களின் கடந்த கால வரலாறுகளை அறிவதற்கும் எதிர்வரும் காலங்களில் அதன் ஊடாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் ஆராய்வதற்கு உதவியாக இருக்கும்- என்றார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத தடை சட்டம் இரத்து;

# மதிப்பாய்வு குழு தயாரித்த அறிக்கை நீதி அமைச்சரிடம்

கொழும்பு, நவ. 14

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து மதிப்பாய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரகுலரத்ன, குழுவின் அறிக்கை, பரிந்துரைகளை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் அதிகாரபூர்வமாக ஒப்படைத்துள்ளார்.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து மதிப்பாய்வு செய்வதற்கும் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை முன்மொழிவதற்கும் இந்தக் குழு அமைக்கப்பட்டதாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு ஏப்ரல் 13 அன்று அறிவித்தது.

பரந்த, உள்ளடக்கிய சீர்திருத்த செயல்முறையை உறுதி செய்வதற்காக, சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து உள்ளீடுகளையும், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களிடமிருந்து கருத்துக்களையும் பெறுவதும் இந்தக் குழுவுக்குப் பணிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் ஏப்ரல் 11 ஆம் திகதி நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தலைமையில் அமைச்சின் வளாகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின்போது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமையாகும் என்று அமைச்சர் நாணயக்கார மீண்டும் வலியுறுத்தினார்.

அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், சர்வதேச தரங்களுக்கு இணங்க, அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரங்களை நிலைநிறுத்தும் அதேவேளையில், சமகால உலகளாவிய பயங்கரவாத சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்த சட்ட சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதில் கடந்த கால அரசாங்கங்கள் உரிய விடா முயற்சியுடன் செயல்படவில்லை என்றும், நியமிக்கப்பட்ட குழுவிற்கு குறுகிய காலத்திற்குள் சட்டத்தை இரத்து செய்வதற்கான தொடர்புடைய விடயங்களை உறுதியான முறையில் அடையாளம் காண அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஊவா முதல்வர் வேட்பாளராக களமிறங்குவாரா சாமர சம்பத்?



கொழும்பு, நவ. 14

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் தயாரில்லை என்று பாராளுமன்ற உறுப்பினரும் ஊவா மாகாண சபையின் முன்னாள் முதல்வருமான சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எனினும், சவாலை ஏற்குமாறு கட்சி கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அது பற்றி பரிசீலிக்கலாம். ஆனால் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

"பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் வழங்குமாறு நான் கோரவில்லை. மாறாக பாதுகாப்பு வழங்குமாறே வேண்டுகோள் விடுத்துள்ளேன். அந்த கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனினும், வாகனம் வழங்கப்பட்டால் அதனை நிராகரிக்கமாட்டேன். ஏனெனில் பதுளையில் இருந்து கொழும்பு வருவதற்கு வாகனம் அவசியம்.

அதேவேளை, எதிரணி உறுப்பினருக்குரிய கடமையை நான் சரிவர நிறைவேற்றி வருகின்றேன். அரசாங்கம் தவறிழைக்கும்பட்சத்தில் அதனை சுட்டிக்காட்டும் உரிமை எனக்கு உள்ளது.

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணியில் நாம் கலந்து கொள்வோம். சுதந்திரக் கட்சியாக நாம் களமிறங்குவோம்." எனவும் சாமர சம்பத் தஸநாயக்க எம்.பி. குறிப்பிட்டார். (அ)

# வெலிகம பிரதேச சபையின் தவிசாளராக தனுஷ்க டி சில்வா

கொழும்பு, நவ. 14

வெலிகம பிரதேச சபை தவிசாளர் பதவி வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் சமீர தனுஷ்க டி சில்வாவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி துப்பாக்கிச்சூட்டில் முன்னாள் தவிசாளர் லசந்த விக்ரமசேகர உயிரிழந்தார்.

அவரின் மறைவை அடுத்து ஏற்பட்ட வெலிகம பிரதேச சபை தவிசாளர் பதவி வெற்றிடத்துக்கு தனுஷ்க டி சில்வாவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் தெருநாய் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 14

இலங்கையில் இரண்டு மில்லியன் முதல் மூன்று மில்லியன் வரையில் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கை விலங்குகள் நலச் சங்கம் எச்சரித்துள்ளது.

நாய்களின் அதிகரிப்பால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 250,000 தெரு நாய்க்கடி சம்பவங்கள் பதிவாவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண் நாய்கள் வருடத்துக்கு இரண்டு முறைகள் குட்டி ஈனுவதால் தற்போது இலங்கையில் எட்டு மனிதர்களுக்கு ஒரு தெரு நாய் என்ற வீதத்தில் அதன் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக விலங்கு நலன் மூலம் சமூகப் பாதுகாப்புக்கான கண்டிச் சங்கத்தின் செயலாளர் சம்பா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# மாலைதீவில் கைதான 5 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதில் சிக்கல்நிலை!

கொழும்பு, நவ. 14

போதைப்பொருள் கடத்தலுடன் கைது செய்யப்பட்ட 5 இலங்கையர்களையும் 30 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க மாலைதீவு பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்படி, அவர்களை நாட்டுக்கு அழைத்து வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்தனர்.

மாலைதீவு கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கூறப்படும் அவிஸ்க புத்தா என்ற படகு, அந்த நாட்டு தேசிய பாதுகாப்புப் படையின் கடலோர காவல்படை அதிகாரிகளால் நவம்பர் 7 ஆம் திகதி தடுத்து நிறுத்தப்பட்டது.

மாலைதீவு பொலிஸாரின் கூற்றுப்படி, படகில் 355 கிலோவிற்கும் அதிகமான போதைப் பொருள் இருந்தது.

அதில் இருந்த ஐந்து இலங்கை பணியாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, மாலைதீவு அதிகாரிகள் கடந்த 10 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட படகில் சிறப்பு சோதனை நடத்தினர்.

இந்த ஆய்வில் 24 மீன்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 58.6 கிலோ ஹெரோயின் மற்றும் 297.3 கிலோ மெத்தம்பேட்டமைன் (ஐஸ்) கண்டுபிடிக்கப்பட்டன.

இலங்கை கடற்படை, இலங்கை பொலிஸார், மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை மற்றும் மாலைதீவு காவல்துறை இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 39, 42, 28, 34 மற்றும் 63 வயதுடைய இலங்கையர்கள்.

இந்த பறிமுதல் மாலைதீவு பிராந்திய நீரில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் கண்டறிதல் என்று மாலைதீவு அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், சந்தேக நபர்களையும் போதைப்பொருள் கடத்தலையும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மாலைதீவு சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் நடைபெற்று வருவதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாலைதீவு பாதுகாப்பு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த விசாரணைகளைத் தொடங்குவதற்காக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் குழுவும் ஒரு சிறப்பு கடற்படைப் பிரிவும் ஏற்கனவே மாலைதீவுக்குச் சென்றுள்ளன.

எனினும், அந்நாட்டு பாதுகாப்புப் படைகள் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவைப் பெற்றுள்ளதால், அவர்களை இலங்கைக்கு அழைத்து வர முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு கடவுள்"

கொழும்பு, நவ. 14

சர்வதேச நாணய நிதியத்தை இந்த ஆட்சியாளர்கள் கடவுளாக நினைக்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்தின் முன்பாக முட்டாள் பக்தர்கள் போல் முழந்தாளிடாதீர்கள். மேற்குலக நாடுகள் மத்தியில் அரசாங்கம் தலை குனிந்து செயற்படுகிறது. இதனால் இலங்கை தனது தேசிய கௌரவத்தை இழந்துள்ளதென சர்வசன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை செயற்படுத்துவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு அரசாங்கம் நாட்டை பொருளாதார ரீதியில் மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது. 2028ஆம் ஆண்டுக்கு பின்னர் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வித திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. ஆகவே அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பேரண்ட பொருளாதாரம் நாட்டு மக்களுக்கு பயனுடையதாக அமையும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். சமூக கட்டமைப்பில் ஏழ்மை 3 வீதமாகவும் தொழிலின்மை 2 வீதத்தாலும் உயர்வடைந்துள்ளது. ஆனால் நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையவில்லை. சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகள் மீதான வற் வரி நீக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அந்த சர்வதேச நாணய நிதியத்துக்கு அச்சமடைந்து வாக்குறுதிகளை மறந்துவிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் சகல நிபந்தனைகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மேற்குலக நாடுகள் மத்தியில் அரசாங்கம் தலைகுனிந்து செயற்படுகிறது. இதனால் இலங்கை தனது தேசிய கௌரவத்தை இழந்துள்ளது-என்றார்.

# வீதி விளக்குகளுக்கான மின் கட்டணத்தை செலுத்த தவறிய உள்ளூராட்சி சபைகள்!

கொழும்பு, நவ. 14

கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட நாடளாவிய ரீதியிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகளுக்கான மின்சார கட்டணத்தை செலுத்த தவறியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் குமார ஜெயகொடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தர்மப்பிரிய திஸாநாயக்க முன்வைத்த வாய்மொழிமூல வினாவுக்கு பதில் வழங்கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

மின்சார கட்டணத்துக்கான பட்டியல்கள் இலங்கை மின்சார சபையினூடாக விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த உள்ளூராட்சி நிறுவனங்கள் அதனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வீதி விளக்குகளுக்கான விசேட மின்சார கட்டணம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணமே அறிவிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சார கட்டணத்தை உள்ளூராட்சி மன்றங்கள் செலுத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் உரிய கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் அபிவிருத்தியை சம்பளத்துடன் வரையறுக்க வேண்டாம்

## மனோ கணேசன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, நவ. 14

மலையக மக்களின் அபிவிருத்தியை சம்பளத்துக்கு மாத்திரம் வரையறுக்க வேண்டாம். அரசாங்கம் அட்டன் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தன் பிரகாரம் அவர்களுக்கான காணி உரிமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு -செலவுத் திட்ட உரை மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் மற்றும் தோட்டக் கம்பனிகள் இணைந்து 400 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு எடுத்த தீர்மானத்துக்கு எமது தமிழ் முற்போக்கு முன்னணி கட்சியின் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் யாராவது சந்தேகம் தெரிவித்தால், அது சம்பள அதிகரிப்பு வழங்கக்கூடாது என்பது அல்ல, மாறாக நீங்கள் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஏதாவது சட்ட பிரச்னை ஏற்பட்டால் என்ன செய்வது என்ற ஒரு சந்தேகத்திலே அவ்வாறு தெரிவிக்கிறார்கள்.

அதனால் சம்பள அதிகரிப்புக்கு நாங்கள் யாரும் எதிர்ப்பு இல்லை. அதனை வழங்க வேண்டும் என்றே தெரிவிக்கிறோம். சட்டப்பிரச்னை வந்தால் அதனை அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும், பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளை சம்பளத்துக்கு மாத்திரம் வரையறுக்க வேண்டாம். ஏனெனில் கடந்த வருடம் இடைக்கால வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரான சமன்த வித்தியாரத்ன உரையாற்றுகையில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் அமைக்கப்பட்ட வீடுகளில் 1300 வீடுகள் எஞ்சி இருக்கின்றன.

அதனை சேர்த்து டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் 6ஆயிரம் வீடுகளை அமைப்பதாக தெரிவித்திருந்தார். என்றாலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றே தெரிவிக்கிறோம்- என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை வீழ்ச்சி அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, நவ. 14

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடுத்த சில நாட்களில் மழையுடனான வானிலையில் அதிகரிப்பு ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதற்கமைய வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# போதைப்பொருள் வைத்திருந்த இளைஞனுக்கு தடுப்புக்காவல்

நுவரெலியா, நவ. 14

நுவரெலியா பொலிஸ் ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தேடுதலின் போது நுவரெலியா, உடப்புசல்லாவ அனிக் பகுதியைச் சேர்ந்த 31 வயது போதைப்பொருள் வியாபாரியான இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு, பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் 2,270 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் 33.8 மில்லி கிராம் கஞ்சாவும் ஓர் இலட்சம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை வலப்பனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, ஐந்து நாட்கள் தடுப்புக் காவலுக்கு உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நுவரெலியா பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெறுகின்றன.

# 300 கிலோ போதைப் பொருளுடன் 6 பேர் கைது!

கண்டி, நவ. 14

கண்டி, கிரிந்த பகுதியில் போதைப்பொருட்களுடன் 6 சந்தேக நபர்கள் மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் மொத்த நிறை சுமார் 300 கிலோ கிராமாகும்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நுவரெலியாவில் தீ விபத்து; பொருட்கள் எரிந்து நாசம்!

நுவரெலியா, நவ. 14

நுவரெலியா நகரில் பலசரக்கு கடை ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.


குறித்த கடையின் உட்பகுதியில் வெல்டிங் வேலைகள் இடம்பெற்றபோது வெல்டிங் செய்த தீப்பொறிகள் தெறித்து அருகில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளில் பட்டு, உடனடியாக பட்டாசுகள் தீப்பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாரிய வெடிச் சத்தங்களுடன் தீ பற்றியதால் கரும்புகை வெளியாகி மக்கள் அசௌகரியத்தை எதிர்கொண்டனர்.

தீயை கட்டுப்படுத்த நுவரெலியா மாநகர சபை தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மேலும், ஏனைய வர்த்தக நிலையங்களுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

தீ விபத்தால் களஞ்சிய பகுதியில் வைக்கப்பட்டிருந்த வெங்காயம், கோதுமை மா, அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தீயில் கருகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# கடைக்குள் புகுந்த பஸ்: பெண் பலி

நுவரெலியா, நவ. 14

பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலிஓய, கரமட பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில், கரமட பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான தக்ஷிலா ரத்நாயக்க (வயது -35) கடையில் இருந்தபோது சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி அதிவேகமாக சென்ற ஒரு தனியார் பஸ்ஸே இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பஸ் முதலில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவை பலமாக மோதி, அதனைத் தொடர்ந்து ஒரு வீட்டுக்குச் சேதம் விளைவித்துவிட்டு, இறுதியாக கடைக்குள் புகுந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதியும் உயிரிழந்த தாயின் ஆறு வயது மகளும் மேலதிக சிகிச்சைக்காக பேராதனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய தனியார் பஸ் சாரதியை பேராதனை பொலிஸார் உடனடியாகக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதுடன், மேலதிக விசாரணைகளைப் பேராதனை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சாய்ந்தமருதை பாதுகாப்பதற்கு இணைந்து செயல்பட வேண்டும்

சாய்ந்தமருது, நவ. 14

அனர்த்தங்களை முறையாக கையாண்டு பாதிப்புக்களை குறைத்து பாதுகாப்பான சாய்ந்தமருதை தக்கவைப்பதே எங்களுக்கு இலக்காக இருக்கிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் எங்களுக்குக் கடும் சோதனையாக இருந்தது. ஆனால், மக்களும் சமூக அமைப்புகளும் ஒன்றிணைந்து விரைவாக செயல்பட்டதால் பெரும் சேதத்தைத் தடுக்க முடிந்தது என சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்குள் அனர்த்த முகாமைத்துவ செயல்குழு ஒன்றை அமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-06)

# மட்டக்களப்பில் பிறப்பு, திருமண பதிவுக்கான நடமாடும் சேவை

மட்டக்களப்பு, நவ. 14

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பிறப்பு மற்றும் திருமண பதிவு பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் உதவிப் பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன் நெறிப்படுத்தலில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவில் இதுவரை காலமும் பிறப்பு மற்றும் திருமண பதிவு பெற்றுக் கொள்ளாத சுமார் 50 இற்கும் மேற்பட்டோருக் கான பதிவு சான்றிதழ்கள் அவ்விடத்திலேயே வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு வலயத்துக்கான பிரதிப் பதிவாளர் நாயகம் கே. நடராஜா, மனித உரிமை மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தின் கிழக்கு பிராந்திய இணைப்பாளர் பா. பரசுராமன், பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் கே.பேரின்ப நாயகம், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவைக்கான அனுசரணையை மனித உரிமை மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் வழங்கியிருந்தது. இந்த நடமாடும் சேவையை பிரதேச செயலக பதிவாளர் மற்றும் சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்கில்...

போதைப்பொருளை கையாண்டது. அந்த உத்தி வடக்கு, கிழக்கில் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. இளைஞர்களின் விடுதலை போராட்ட உணர்வை சிதைக்கவே போதைப்பொருளும் பிற தீமைகளும் பரப்பப்பட்டன. இராணுவம் வடக்கு, கிழக்கில் இருக்கும் வரை - அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான மனநிலையை இன்னும் கொண்டிருக்கும் வரை போதைப்பொருட்களுக்கு எதிரான போர் முற்றிலும் தோல்வியடையும் என்ற கருத்துகளை கூறினேன்.

இந்தக் கருத்துகளுடன் அமைச்சர் சந்திரசேகர் உடன்பட்டார் - ஒப்புக்கொண்டார். ஏனெனில், ஜே.வி. பியை பிரதிநிதித்துவப்படுத்தி 15, 16 வருடங்களாக அவர் யாழ்ப்பாணத்தில் வசித்து வருகிறார். எனது கருத்து பொய் என்று கூற அவரால் முடியாது. நான் சொன்னது பொய் என்று அமைச்சர் கூறியிருந்தால் அவர் யாழ்ப்பாணத்துக்கு செல்ல முடியாது என்பது அவருக்கு தெரியும். எனவே, இயல்பாகவே அமைச்சர் பொறுப்பான முறையில் ஒப்புக்கொண்டார்.

ஆனால், பதில் பாதுகாப்பு அமைச்சரின் கருத்து எனக்கு ஆச்சரியமாக உள்ளது. இராணுவம் மிகவும் தூய்மையானது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இராணுவத்தினர் பற்றிக்கூறிய கருத்துக்கு ஆதாரங்களை முன்வைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

நான் சில விடயங்களை பொறுப்புடன் தெரிவிக்கிறேன்.

பாதிக்கப்பட்ட மக்கள் இராணுவத்துக்கு எதிராக புகார் அளிக்க பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் போது- பொலிஸார் அந்த முறைப்பாடுகளை ஏற்க மறுக்கிறார்கள். இந்த விடயங்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் தெரிவிக்கப்படுபவை. இந்த அரசாங்கத்தின் காலத்தில் மட்டுமல்ல- முந்தைய அரசாங்கங்களான - மகிந்த ராஜபக்ச, கோட்டாய, ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் கூட தெரிவிக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்டத்தில் இரண்டு குடிமக்களுக்கு ஒரு இராணுவம் என்ற நிலை உள்ளது. இப்படியான நிலையில் இராணுவத்துக்கு தெரியாமல் போதைப்பொருள் பரவல் அதிகரித்துள்ளது என்று நீங்கள் சொல்ல வருகிறீர்களா?

- யாரை முட்டாளாக்க முயற்சிக்கிறீர்கள்? இப்போதைய தரவின்படி யாழ்ப்பாணத்தில் 14 பொதுமக்களுக்கு ஒரு இராணுவம் என்ற நிலை காணப்படுகிறது. என்ற அதிகாரபூர்வ எண்ணிக்கையை அறியாமல் கருத்து சொல்ல வருகிறீர்களா? இராணுவ புலனாய்வுத்துறை மிக அதிகமாக இருக்கின்ற நிலையில்- உங்களுக்குத் தெரியாமல் இது நடக்கக்கூடும் என்று நீங்கள் சொல்லி தயவுசெய்து எங்களை முட்டாளாக்காதீர்கள்.

போதைப்பொருள் மற்றும் பிற தீமைகளுக்கு எதிராக இந்த அரசாங்கம் செயல்படுவதற்கு எங்கள் முழு ஆதரவும் இருக்கும். வடக்கு, கிழக்கில் நீங்கள் இராணுவத்தின் ஈடுபாட்டைக் கையாளாமல் ஒருபோதும் அந்த அச்சுறுத்தலிலிருந்து விடுபட மாட்டீர்கள்.

தெற்கில் இதேவிதமான போதைப்பொருள் அச்சுறுத்தலில் ஈடுபட்டவர்கள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள்தான். ஏனென்றால் கடந்த 17 ஆண்டுகளில் நீங்கள் அதை கட்டுப்படுத்தவில்லை. இப்போது தெற்கிலும் இது ஓர் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே, தயவுசெய்து வடக்கு கிழக்கில் ஆரம்பித்த போதை பரவல் இப்போது நாடு முழுவதும் புற்றுநோயைப் போன்று பரவாமல் பார்த்துக் கொள்ளுங்கள் - என்றார். (ஐ)

## இளைஞர்கள்...

கலட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள் 20, 21, 22 வயதினர் என்றும் அவர்களிடமிருந்து 50 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## கிணற்றில்...

- கொம்மாந்துறையில் நேற்று வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த நிரேக்சன் (வயது 18) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

உயிரிழந்த இளைஞர் உட்பட ஐவர் தோட்டக் கிணற்றில் குளிப்பதற்காக சென்றுள்ளனர். அனைவரும் கயிறு கட்டி கிணற்றுக்குள் இறங்கி நீராடியுள்ளனர். சிறிது நேரத்தின் பின்னர் நால்வர் கிணற்றுக்குள்ளிருந்து ஏறி வெளியேறியுள்ளனர். குறித்த இளைஞர் மாத்திரம் நீராடிக் கொண்டிருந்தார். அவரை வருமாறு மற்றவர்கள் அழைத்தபோது, சிறிது நேரம் கழித்து வருவதாகக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், நீண்டநேரமாகியும் இளைஞரை காணாததால் அவருடன் குளித்தவர்கள் மீண்டும் வந்து கிணற்றைப் பார்த்துள்ளனர். அப்போது, கயிறு அறுந்த நிலையில் காணப்பட்டதுடன் இளைஞரையும் காணவில்லை. இதைத் தொடர்ந்து ஏனையோரின் உதவியுடன் கிணற்றில் இறங்கி தேடியபோது இளைஞர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

மரண விசாரணைகளை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் மேற்கொண்டார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாட்டில்...

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மேலும், அண்மைய தரவுகளின்படி நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை 73 சதவீத அதிகரிப்பை கண்டுள்ளது. உலகளவில் 9 பெரியவர்களில் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நாட்டில், இந்தப் பாதிப்பு 23 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, ஐந்து பெரியவர்களில் ஒருவர் நீரிழிவு நோயாளராக உள்ளார். இவர்களில், மூன்றில் ஒரு பங்கினர் கண் பார்வை இழப்பால் பாதிக்கப்படுகின்றனர்.

இவர்களில், 11 சதவீதத்தினர் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் பார்வையற்றவர்களாக மாறும் அபாயம் உள்ளது. ஏனெனில் நீரிழிவு குறிப்பாக கண்களை பாதிக்கிறது. நீரிழிவு தொடர்பான குருட்டுத்தன்மை மற்றும் பார்வை குறைபாடு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 92 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, 40 முதல் 50 வயதுக்குட்பட்டவர்களுக்கே இவ்வாறான நோய் ஏற்படுகிறது. இந்த நோய் தடுக்கக்கூடியது. இந்த நபர்கள் பார்வையை இழக்க எந்தக் காரணமும் இல்லை. அதன் ஆரம்ப கட்டங்களில், வாழ்க்கை முறை மாற்றங்கள், உணவுக் கட்டுப்பாடு மற்றும் வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் மூலம் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## முள்ளிவாய்க்காலில்...

தொல். திருமாவளவன் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல்கள்...

சமன் சிறீ ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

சமன் சிறீ ரத்நாயக்க கடந்த 2019 ஒக்ரோபர் 16ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தார். 34 வருடங்களாக அரச சேவையில் பணியாற்றிய சமன் சிறீ ரத்நாயக்க நேற்றைய தினத்துடன் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாகாண...

முன்னர் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கும்போது, மாகாண சபைகள் தேர்தலை எப்போது நடத்தப்போகிறீர்கள் என எமது கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதியிடம் கேட்டபோது, மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறேன். தேர்தலை நடத்தும் திகதியை என்னால் தீர்மானிக்க முடியாது. பாராளுமன்றத்தில் இருக்கும் அனைவரும் இணைந்து அதற்கு சட்டம் ஒன்றை அனுமதித்து தருமாறு தெரிவித்தார்.

அதனால், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது தொடர்பில் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி, பிரதமரின் தலைமையில் குழு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயரை கேட்டுக் கொள்கிறோம். ஒரு வருடத்தில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எமது பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம். அதனால் பழைய முறைக்காவது தேர்தலை நடத்தி, மாகாண சபைகளை அமைப்பதற்கு மக்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவோம் - என்றார். (ஐ)

## யாழ்...

மக்கள் முன்னணிக்கு எதிராக விஷமப் பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கொக்குவிலிலுள்ள கட்சியின் தலைமை பணிமனையில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## அன்று...

கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒப்பிட்டு பேசுவதை ஒரு சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். எனினும், ஏனைய அரசாங்கத்தைப்போல நாம் ஒருபோதும் இல்லை. பழைய அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வருமாயின், அதை போன்றதோர் அரசாங்கத்துடன் நன்மை, தீமைகளை ஒப்பிட்டு பேசலாம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுடன் ஒன்றிணைந்த - தரப்படுத்தப்பட்ட அரசாங்கத்தை கட்டியெழுப்பியுள்ளது.

ஆட்சியை கைப்பற்றிய பின்னர் நாட்டின் சட்ட விதிமுறைகளையும் தரப்படுத்தியுள்ளோம். அன்று ஆட்சியை கைப்பற்றப் போராடினோம் - இன்று இந்த நாட்டுக்கு வெற்றியை பெற்று தருவதற்காக கடுமையாகப் போராடி வருகிறோம். அப்போதைய நோக்கமும் தற்போதைய நோக்கமும் அபிலாசையும் மாத்திரமே மாறியுள்ளது. மக்களால் வழங்கப்பட்ட பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் ஆட்சி செய்யக்கூடாது என்ற பொறுப்புணர்வுடன் செயல்படுகிறோம்.

உயர்ந்த பதவியிலிருந்துகொண்டு தன்னிச்சையான முடிவுகளை நாம் எடுப்பதில்லை. அரசாங்கத்தின் உண்மையான பலம் பொதுமக்களே, இறுதி மூச்சுவரை நாட்டின் நிலையான மாற்றத்துக்காக சளைக்காமல் போராடுவோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது சாத்தியமில்லை எனக் கூறினார்கள். பின்னர் ஆட்சிக்கு வந்தாலும் ஆட்சியை கொண்டு நடத்தத் தரமான ஆட்சியாளர் இல்லை என்று வதந்திகளை பரப்பினார்கள். எனினும், தேசிய மக்கள் சக்தி மக்களின் ஆதரவுடன் ஒன்றிணைந்து வெற்றிகரமாக செயல்படுகிறது - என்றார். (ஐ)

## பொய்...

வலைதளங்களின் செயல்பாடுகளை சிறப்புரிமைகள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தி, உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

## மாவீரர்...

வடக்கு, கிழக்கில் 32இற்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்கள் உள்ளன. இன விடுதலைக்காகப் போராடியவர்களின் நினைவான துயிலும் இல்லங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு சகலருக்கும் உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## சொந்த...

கூறினார். அத்துடன், எதிர்க்கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற தகவல் கடந்த காலங்களில் ஊடகங்களில் வெளியாகி இருந்தன. இதனைத் தொடர்ந்து சபாநாயகர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ரவி கருணாநாயக்க, திலீப் வெதஆராச்சி, ரவூப் ஹக்கீம், இரா.சாணக்கியன், இராமநாதன் அர்ச்சுனா மற்றும் பொலிஸ், இராணுவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவினர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அச்சுறுத்தல் எங்கிருந்து வருகிறது என்று கேட்டபோது, மரிக்கார் என்ன சொன்னார் தெரியுமா? எங்கள் கட்சியின் வேட்புமனு குழுவில் தான் இருந்தார் என்றும் வேட்புமனு வழங்காதவர்களால் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். எனவே, வீட்டுக்குள் உள்ள பிரச்னைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்தேன் - என்றார்.

உண்மையில், அவர்களின் பொதுச் செயலாளர் மனச்சாட்சிக்கமைய பேசுவாராயின் இது குறித்துத் தெரிவிப்பார். இவர்களின் சிறப்புரிமை மீறப்படவில்லை. அவரின் சிறப்புரிமை கட்சியின் உள்ளேயே மீறப்பட்டுள்ளது. கட்சிக்குள் உள்ளவர்களை கட்டி வையுங்கள். சமந்த வித்யாரத்னவின் சிறப்புரிமை மீறப்படவில்லை.

அத்தோடு நான் மற்றுமொரு விடயத்தையும் சபாநாயகரிடம் கேட்க விரும்புகிறேன். அரசமைப்பு குழுக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களை தயாசிறி ஜயசேகர இங்கு எப்படி கூறுகிறார். அரசமைப்பு சபையில் எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் யார் இருக்கிறார்கள். உங்களிடம் ஒன்றை கேட்கிறேன். சபாநாயகர் என்ற வகையில் அங்கு பேசப்பட்ட இரகசியங்கள் எவ்வாறு வெளிவருகின்றன. எனவே, பாராளுமன்ற உறுப்பினர் மரிக்காரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது அவர்களின் கட்சி உறுப்பினர்களாலேயே. எனவே அரசமைப்பு சபைக்கு சபாநாயகர் தலைமை தாங்கியதால் இது தொடர்பில் ஏதேனும் அறிய வேண்டுமெனில் சபாநாயகரிடம் கேளுங்கள் என்று நான் ஊடகங்களிடம் தெரிவித்தேன். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கைச் சிறைகளில் ஏற்படும் உயிரிழப்பு எண்ணிக்கை உயர்வு!

## விசேட அறிக்கை ஒன்றில் தகவல்

கொழும்பு, நவ. 14

**கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறை வழிமுறைகள் இல்லாததால் காரணமாக சிறைச்சாலை இறப்புகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவால் வெளியிடப்பட்ட 'இலங்கையில் கைதிகளின் நிலைமை' 2025 ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனவரி முதல் நவம்பர் 2024 வரை இலங்கை சிறைகளில் குறைந்தது 168 கைதிகள் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், 155 பேர் நோய்களாலும், ஒன்பது பேர் தற்கொலையாலும், இரண்டு பேர் சிறைச்சாலைகளில் தாக்குதல்களாலும், இரண்டு பேர் சிறைச்சாலைகளில் விபத்துகளாலும் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு மார்ச் முதல் மே வரையிலான இரண்டு மாத காலத்தில் ஐந்து சிறைச்சாலை மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் பராமரிப்பு வசதிகளில் கடுமையான பலவீனம் இருப்பதாகவும், பெரும்பாலான இறப்புகள் புறக்கணிக்கப்பட்ட மருத்துவ நிலைமைகள் மற்றும் போதுமான மருத்துவ தலையீடு இல்லாததால் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில், கைதிகளின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை வலுக்கட்டாயமாக உட்கொள்வதும், அடிப்படை மருத்துவ சேவையை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதும் இந்த நிலைமையை தீவிரமாக அதிகரிக்க வழிவகுத்துள்ளதாக அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. (அ)

# இலங்கையில் கடும் சரிவை கண்டுள்ள கட்டுமானத்துறை

கொழும்பு, நவ. 14

தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இலங்கையின் கட்டுமானத் துறையின் பங்களிப்பு தற்போது கணிசமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு காலத்தில் ஒன்பது வீதமாக இருந்த பங்களிப்பு தற்போது 3.5 வீதம் முதல் 6 வீதம் வரை குறைந்துள்ளதாக இலங்கை கட்டுமான சங்கத் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் தங்கள் கட்டுமான வாய்ப்புகளில் பெரும்பாலானவற்றை இழந்துவிட்டதாகவும், 40 வீதத்திற்கும் அதிகமான தொழில்துறை கட்டுமானத் தொழில் மேம்பாட்டு ஆணையகத்தில் பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள "இந்த வரவு செலவுத் திட்டம் கட்டுமானத் துறைக்கு தெளிவாக பாதகமானது" என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு காலத்தில் திறமையான துறை இப்போது கடுமையாக செயலிழந்துவிட்டது, கட்டுமான நிபுணர்கள் அல்லது சிறு மற்றும் நடுத்தர தொழிலாளர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, தொடர்ச்சியான செலவினங்களுக்காக விடுவிக்கப்படுவதைப் போலவே வெளியிடப்படவேண்டும் என்றும் லியனாராச்சி எடுத்துரைத்தார்.

கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கட்டுமானத் துறைக்கு பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அதில் 47 வீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது, இதன் விளைவாக தொழில்துறையில் தேக்கம் மற்றும் மேலும் சரிவு ஏற்பட்டது. கடந்த ஆண்டு கட்டுமானத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 53 வீதத்தை அரசாங்கம் வேண்டுமென்றே பயன்படுத்தவில்லை" என்று லியனாராச்சி குற்றம் சாட்டினார். (அ)

# பலாலியில் காணிகள் விடுவிப்பு; உயர்மட்ட கூட்டத்தில் ஆராய்வு!

கொழும்பு, நவ. 14

யாழ்ப்பாணம்-பலாலி பகுதியில் தற்போது இராணுவப் பயன்பாட்டில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பது தொடர்பில் காணப்படும் முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்கான உயர்மட்டக் கூட்டம் கடந்த 11ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு ஆகியோர் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.

தேசிய நல்லிணக்கச் செயல்முறையின் ஒரு பிரதான அங்கமாக காணப்படும் நிலம் தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பதில் அரசாங்கத்தின் முயற்சிகளை விரைவுபடுத்துவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

எல்லை மீள் நிர்ணயத்தை இறுதி செய்தல், இழப்பீட்டுச் செயல்முறையை விரைவுபடுத்துதல், விடுவிப்பதற்கான நிலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் நிர்வாகத் தடைகளைத் தீர்த்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

முக்கியமான பாதுகாப்பு உட்கட்டமைப்பு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு காணி உரிமையாளர்களுக்கு தங்கள் சொத்துக்களை மீண்டும் பயன்படுத்த வதை உறுதி செய்யும் வெளிப்படையான மற்றும் சமமான செயல்முறையின் முக்கியத்துவத்தை அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு மற்றும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த பல சிரேஷ்ட உயர் அதிகாரிகளும் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். (அ)

# புதிய அரசமைப்பு குறித்து அநுர மௌனம் காப்பது ஏன்?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, நவ. 14

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் ரசிக்க ஆரம்பித்துவிட்டார். இதன் காரணமாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உள்ளடங்கலாக புதிய அரசமைப்பு பற்றி அவர் மௌனம் காத்து வருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆவது வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசமைப்பு இயற்றப்படும் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும், இதற்குரிய நடவடிக்கை இன்னும் ஆரம்பமாகவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை தற்போதைய ஜனாதிபதியும் ரசிக்க ஆரம்பித்துவிட்டார்போலும்.

மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. சட்டம் இயற்றி தருமாறு ஜனாதிபதி தற்போது கூறுகின்றார். பழைய முறைமையின்கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம். இது தொடர்பில் பாராளுமன்றத்தில் தனி நபர் பிரேரணையொன்றுகூட முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளுக்கு நாம் முழு ஆதரவை வழங்குவோம்.

மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத ஜனநாயக விரோதமாகும். எனவே, தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். எல்லா விடயங்களை பற்றியும் பேசும் ஜனாதிபதி, புதிய அரசமைப்பு பற்றி ஏன் மௌனம் காக்கின்றார்? புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை? அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?-என்றார். (அ)

# ஹல்லொலுவவுக்கு பிடியாணை

கொழும்பு, நவ. 14

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி பகுதியில் தாம் பயணித்த வாகனம் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறி, போலியான முறைப்பாடு செய்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக துசித ஹல்லொலுவ பெயரிடப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, சந்தேக நபரான துசித ஹல்லொலுவ நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

இதையடுத்து, நீதவான் இந்த பிடியாணையைப் பிறப்பிக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# மன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு சட்டவிரோதமாக சென்றவர் கைது!

சென்னை, நவ. 14

சட்ட விரோதமான முறையில் மன்னாரில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியைச் சென்றடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டார்.

தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரை பகுதியில் நேற்று காலை மரைன் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்றுகொண்டிருந்த நபரை பிடித்து விசாரித்துள்ளனர்.

அப்போது அவர், சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக இலங்கையிலிருந்து தனுஷ்கோடி சென்று இறங்கியமை தெரியவந்தது.

அதனையடுத்து அவரை கைது செய்த மரைன் பொலிஸார் அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் மன்னார் வங்காலை பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் என்பது தெரியவந்தது.

இதையடுத்து, சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக தமிழகத்துக்குள் சென்றதற்கான காரணம் குறித்து மரைன் பொலிஸார் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 8 வயது சிறுமி துஷ்பிரயோகம் குற்றவாளிக்கு 8 வருட கடூழியம்!

## மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

மன்னார், நவ. 14

மன்னார், அடம்பன் பிரதேசத்தில் 8 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், எதிரி குற்றவாளியாக இனங்காணப்பட்டு, அவருக்கு 8 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் குற்றம் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை, மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.மிஹால் முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் நீண்ட விசாரணைகளின் பின்னர், எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

தண்டனை குறித்த தனது சமர்ப்பணத்தில், அரச சட்டவாதி தனுஷன், இக் குற்றத்தின் பாரதூரமான தன்மையையும், சமூகத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் கடுமையாக வலியுறுத்தினார்.

மேலும், "எதிர்காலத்தில் இவ்வாறான கொடூரமான குற்றங்கள் மீண்டும் இடம் பெறாமல் தடுக்கும் பொருட்டு, குற்றவாளிக்கு அதியுச்ச கட்டாய சிறை தண்டனை வழங்க வேண்டும்" எனவும், "கொடூரமான இந்த செயலால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உரிய நஷ்டஈட்டை பெற்றுத் தருமாறும்" மன்றை கோரினார்.

அரச சட்டவாதியின் சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி, குற்றவாளிக்கு 8 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நஷ்ட ஈடாக 2 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் குற்றவாளிக்கு கட்டளையிட்டு நீதிபதி தனது தீர்ப்பை வழங்கினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org